M24/7 Prayer

# ஜாமக்காரர்கள், சபை, தேசம்

ஆண்டவர் ஆசீர்வதிக்கும் மலேசியா மெதடிஸ்ட் சபையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற பயனுள்ள மன்றாட்டாளர்களின் பள்ளிக்காக (போர்ட்டிக்சன் மெதடிஸ்ட் செண்டரில் 13-15/6/2016). மகிழ்ச்சி நிறைந்த இருதயத்தோடே நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம். போதகர்கள், தலைவர்கள், மன்றாட்டாளர்கள் தேறினவர்களாகவும் (1) ஆராதனை & போதனை நேரம், (2) ஜெப நிலையங்களின் பயணம், (3) ஊக்கமான மன்றாட்டு நேரம், (4) சமனான ஐக்கியம் & உற்சாகம், (5) பலமான மெதடிஸ்ட் இணைப்பின் ஆவியை அவர்கள் பெற்றதினால் நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.

நாம் நம் ஸ்தலங்களுக்கு திரும்பிவிட்டோம். நமது திரித்துவ தேவன் தாமே தொடர்ந்து நமது பற்றுதலை ஆழப்படுத்தி, நமது அருமை தேசத்திற்காக, மலேசிய சபைகளுக்காக, இந்த தேசத்தின் மக்களுக்காக ஜெபிக்கும் ஒப்புக்கொடுத்தலை ஓங்கச்செய்வாராக.. நாம் தொடர்ந்து ஜெபத்தில் முன்னேறும்பொழுது கீழ்க்காணும் ஜெப விண்ணப்பங்களையும் நினைவு கூறுவோமாக.

## 1. தனிப்பட்ட வளர்ச்சியை ஆழப்படுத்துவது

- நமது திரித்துவ தேவன் தாமே அவருடைய வார்த்தைகளை தாகிக்கச்செய்யவும் அவருடன் ஆழமான உறவை ஸ்தாபிக்கவும் தரம் மிக்க நேரத்தை அருளிச்செய்வாராக
- பரிசுத்த இருதயமும் ஜீவியமும் இன்னும் மேன்மையடைய ஜெபி. மன்றாட்டாளரின் ஜீவியம் பரிசுத்த ஆவியோடு ஒன்றிணைந்திருக்க வேண்டும்.
- நமது தேசம், சபை, மற்றும் மக்களுக்காக மன்றாடும்பொழுது நமது பலமும், உணர்வும் பரிசுத்த ஆவியின் ஆள்தன்மைக்கும் அவருடைய பிரசன்னத்திற்கும் ஒத்ததாக இருக்க ஜெபி

## 2. இந்த தேசத்திற்கென விழித்திருக்கும் ஒரு சபை

- பொது மாநாட்டிற்காக (20-23/09 - குருமார்கள் ஆட்சி & ஒழுங்கு மீள்பார்வை) மற்றும் அனைத்து மாநாட்டிற்காக, தலைவர் தேர்தல், சபை மக்கள் தலைவர் அனைத்து வாரிய அங்கத்தினர்)
- நமது தேசம் மற்றும் மக்களுக்களுக்காக ஜாமக்காரர்களாகவும், மன்றாட்டாளர்களாகவும் அழைக்கப்பட்ட போதகர்கள், சபைத்தலைவர்கள் தங்கள் அர்ப்பணத்தில் இன்னும் மேலோங்க
- இந்த தேசத்திற்காக இசக்கார் ஜாமக்காரர்கள் என அழைக்கப்பட்டவர்களை தேவன் எழுப்பி வளரச்செய்ய ஜெபி. தேவ வெளிப்படுத்தலுக்கு ஏற்ற திட்டங்களில் நாட்டின் முக்கிய விவகாரங்களுக்கு மன்றாட்டாளர்கள் உத்வேகத்துடன் நகர ஜெபி

## 3. நமது தேசத்திற்காக ஜெபி

- அக்டோபரில் நடக்கவிருக்கும் நாடாளுமன்ற அமர்வில் பாஸ் கொண்டுவரும் தனித்த உறுப்பினரின் மனு விவாதிக்கும்பொழுது கர்த்தருடைய குறுக்கீடு இருக்க முன்னேற்பாடாய் ஜெபி
- மனித உரிமை மற்றும் நியாயத்தை நிலைநிறுத்த நீதியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசு அதிகாரிகளும் எடுத்துரைக்க ஜெபி. ஹூடுட் சட்டத்தை எப்படியாவது உள்ளே புகுத்தி இஸ்லாமிய சட்டமாகிய ஷரியாவை கூட்டரசு அரசியலமைப்பாக்கும் எண்ணத்தில் மறைமுகமாக மாநில சட்ட அதிகாரிகளின் வழி கொண்டுவரும் மறைமுக திட்டங்களுக்கு எதிராக ஜெபி.

**M24/7 Prayer Secretariat (01/07/2016)**